# ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மானியக் கோரிக்கை எண் : 42**

## அறிவிப்புகள்
## 2020 - 2021

**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

## ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் சார்பில் **31** புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**எஸ்.பி. வேலுமணி**

நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்

**1. ஊரகப் பகுதிகளில் 1 கிலோ மீட்டருக்கும் குறைவான நீளமுள்ள சிறிய ஊரக இணைப்புச் சாலைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், ஊரகப் பகுதிகளில் பல்வேறு திட்டங்களின் கீழ் 1 கிலோ மீட்டருக்கும் குறைவான நீளமுள்ள சிறிய ஊரக இணைப்புச் சாலைகள் 300 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும்.

**2. தமிழகத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 850 உறிஞ்சு குழிகள் 161 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

ஊரகப் பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்திடவும், குடியிருப்பு பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருக்களில் திரவக் கழிவுகள் தேங்கி நோய் தொற்று ஏற்படாது பாதுகாத்திடவும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2020–21 ஆம் நிதியாண்டில், தமிழகத்தில் அனைத்து ஊராட்சிகளிலும் 1,45,000 தனிநபர் உறிஞ்சு குழிகள் மற்றும் 17,850 சமுதாய உறிஞ்சு குழிகள், ஆக மொத்தம் 1 இலட்சத்து 62 ஆயிரத்து 850 உறிஞ்சு குழிகள் 161 கோடியே 20 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 3. ஊரகப் பகுதிகளில் 72 இலட்சம் பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணிகள் 207 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

ஊரகப் பகுதிகளை பசுமைமயமாக்கவும், சுற்றுச்சூழலை மாசுபடுத்தும் காரணிகளை கட்டுப்படுத்திடவும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அரசு நிலங்கள், அரசு மற்றும் தனியார் நிறுவனங்கள், பள்ளிகள், கல்லூரிகள், பொது பூங்காக்கள் மற்றும் பொருத்தமான இடங்களில் 2020–21 ஆம் நிதியாண்டில், 72 இலட்சம் பெருமளவு மரக்கன்றுகள் நடும் பணிகள் 207 கோடியே 25 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**4. ஊரகப் பகுதிகளில் 180 கிலோ மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் வடிகால் அமைப்பு 78 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.**

ஊரக பகுதிகளில் சுற்றுச்சூழல் மற்றும் சுகாதாரத்தினை மேம்படுத்திடவும், குடியிருப்பு பகுதிகளில் உள்ள சாலைகள் மற்றும் தெருக்களில் திரவக் கழிவுகள் தேங்கி நோய் தொற்று ஏற்படாது பாதுகாத்திடவும், முறையான வடிகால் வசதியை ஏற்படுத்திடவும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், கிராம ஊராட்சிகளிலுள்ள குடியிருப்பு பகுதிகளில் 180 கிலோ மீட்டர் நீளத்திற்கு சிமெண்ட் கான்கிரீட் வடிகால் அமைப்பு 78 கோடியே 19 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**5. ஊரகப் பகுதிகளில் 100 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் 14 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

விவசாயிகள் உற்பத்தி செய்கின்ற விளைபொருட்களை பாதுகாக்க போதிய சேமிப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், ஊரகப் பகுதிகளில் 100 உணவு தானிய சேமிப்பு கிடங்குகள் தலா 14 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 14 கோடியே 8 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 6. ஊரகப் பகுதிகளில் 200 பால் சேகரிக்கும் கூடங்கள் 30 கோடியே 54 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

கூட்டுறவு பால் சங்கங்களுக்கு பால் சேகரிப்பதற்கு தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்காக, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–21** ஆம் நிதியாண்டில், **200** பால் சேகரிக்கும் கூடங்கள் ஒவ்வொன்றும் **15** இலட்சத்து **27** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில், மொத்தம் **30** கோடியே **54** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 7. ஊரகப் பகுதிகளில் 100 கிராம சந்தைகள் 41 கோடியே 3 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

ஊரகப் பகுதிகளில் உள்ள விவசாயிகள் மற்றும் கைவினைஞர்கள் தங்கள் உற்பத்தி பொருள்களை விற்பனை செய்யும் பொருட்டும் மற்றும் சுய உதவிக் குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்தும் வகையிலும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, **2020–21** ஆம் நிதியாண்டில், **100** கிராம சந்தைகள் தலா **41** இலட்சத்து **3** ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் **41** கோடியே **3** இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

## 8. ஊரகப் பகுதிகளில் 100 கதிரடிக்கும் களங்கள் 5 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

விவசாய விளைபொருட்களை உலர வைக்கவும், மதிப்பூட்டுவதற்கும், விவசாயிகளின் வருவாயினை இரட்டிப்பாக்கும் நோக்கிலும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், ஊரகப் பகுதிகளில் 100 கதிரடிக்கும் களங்கள் தலா 5 இலட்சத்து 43 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் மொத்தம் 5 கோடியே 43 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**9. பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ், 550 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளின் காலமுறை பராமரிப்பு பணிகள் 66 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டத்தின் கீழ், 5 ஆண்டு காலம் தொடர் பராமரிப்பு முடிவுற்ற 550 கிலோ மீட்டர் நீளமுள்ள சாலைகளின் காலமுறை பராமரிப்பு பணிகள் 66 கோடியே 78 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இதில், மத்திய அரசின் பங்குத் தொகை ரூ.40.07 கோடி மற்றும் மாநில அரசின் பங்குத் தொகை ரூ. 26.71 கோடி ஆகும்.

## 10. ஊராட்சி ஒன்றியங்களுக்காக 15 புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் 45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** **2020–21** ஆம் நிதி ஆண்டில், **15** புதிய ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் **45** கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 11. சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஊரக வளர்ச்சித் துறை மேற்கொள்ளும் பணிகளின் தரத்தினை உறுதிசெய்யும் வகையில் 2020–21 ஆம் நிதியாண்டில், சேலம் மற்றும் கோயம்புத்தூர் மாவட்டங்களில் 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடமாடும் தரக்கட்டுப்பாட்டு ஆய்வகங்கள் அமைக்கப்படும்.

## 12. மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் 2020–21 ஆம் நிதியாண்டிலும் 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

மறுசீரமைக்கப்பட்ட ஒருங்கிணைந்த பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டு திட்டம் ரூ.100 கோடி நிதி ஒதுக்கீட்டில் அரசால் 2019–20–ம் ஆண்டு முதல் மீள அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, இத்திட்டமானது 2020–21 ஆம் நிதியாண்டிலும், 100 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் செயல்படுத்தப்படும்.

**13. தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிகள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள் மற்றும் துறை அலுவலர்களுக்கு பயிற்சிகள் அளிக்க 10 மாவட்டங்களில் மாவட்ட பயிற்சி வள மையை கட்டடங்கள் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.**

தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள், துறை அலுவலர்கள் மற்றும் பணியாளர்கள், சுய உதவிக் குழு உறுப்பினர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு உறுப்பினர்கள் மற்றும் பிற துறை அலுவலர்களுக்கு மாவட்ட அளவில் பயிற்சி அளிக்கும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2020–21 ஆம் நிதியாண்டில், 10 மாவட்டங்களில் மாவட்ட ஊராட்சி வள மையங்களுக்கான கட்டடங்கள் தலா 50 இலட்சம் ரூபாய் வீதம் 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும்.

## 14. 12 மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

தமிழகத்தின் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் மேல்நிலை அடுக்காக மாவட்ட ஊராட்சிகள் அமைந்துள்ளன. அத்தகைய மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மக்கள் பணியினை திறம்பட செய்வதற்கு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** பயன்படுத்த இயலாத நிலையில் உள்ள 12 மாவட்ட ஊராட்சித் தலைவர்களின் வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

## 15. 388 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கு புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

தமிழகத்தின் மூன்றடுக்கு ஊராட்சி அமைப்புகளின் இடைநிலை அடுக்காக ஊராட்சி ஒன்றியங்கள் அமைந்துள்ளன. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மக்கள் பணியினை திறம்பட செய்வதற்கு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 385 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களின் வாகனங்களுக்கு பதிலாக புதிய வாகனங்களும் மற்றும் புதிதாக ஏற்படுத்தப்பட்ட 3 ஊராட்சி ஒன்றியத் தலைவர்களுக்கும் புதிய வாகனங்கள் வழங்கப்படும்.

**16. கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

கிராம ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள் குடிநீர் விநியோகத்தில் மிக முக்கிய பங்காற்றுகின்றனர் என்பதுடன், பல ஆண்டுகளாக தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் விதமாக, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** அனைத்து கிராம ஊராட்சிகளிலும் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 4,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

**17. திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் 2,600 ரூபாயிலிருந்து 3,600 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.**

கிராம ஊராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்கள், வீடு வீடாக குப்பைகளை சேகரித்து, மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பைகளாக தரம் பிரித்து, பாதுகாப்பாக அகற்றும் உன்னதமான பணியினை மேற்கொள்வதாலும், அதன் மூலம் கிராமங்கள் சுத்தமாகவும், தூய்மையாகவும் பராமரிக்கப்படுவதை கருத்தில் கொண்டும், அவர்களை ஊக்குவிக்கும் விதமாக, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, அனைத்து கிராம ஊராட்சிகளிலும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தில் ஈடுபடுத்தப்படும் தூய்மைக் காவலர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர தொகுப்பூதியம் **2,600** ரூபாயிலிருந்து **3,600** ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்.

## 18. ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனங்களில், 7 இடங்களில் மெய்நிகர் வகுப்பறைகள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

பயிற்சியாளர்கள் காணொலி கலந்துரையாடல் மூலம் வல்லுநர்களின் பயிற்சிகளில் கலந்து கொள்ளவும், ஊரக பகுதிகளில் தரமான பயிற்சியாளர்கள் / நிபுணர்களின் பற்றாக்குறையை போக்கவும், பயண நேரம் மற்றும் பிற செலவுகளை குறைப்பதுடன் வல்லுநர்கள் மற்றும் நிபுணர்கள் வெவ்வேறு இடங்களிலிருந்து அதிக எண்ணிக்கை யிலான பயிற்சியாளர்களுக்கு கற்றுக் கொடுக்கும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பயிற்சி) ஆணையரகம், மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம் மற்றும் 5 மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் ஆகிய 7 இடங்களில் மெய்நிகர் வகுப்பறைகள் 1 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும்.

**19. ஊரக வளர்ச்சித் துறை பயிற்சி நிறுவனங்களில், 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கற்றவர்களை மையமாக கொண்ட பங்கேற்பு முறையிலான பயிற்சி முறை அறிமுகப் படுத்தப்படும்.**

மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனம், மண்டல ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்கள் மற்றும் 31 மாவட்ட ஊராட்சி வள மையங்களின் மூலம் அளிக்கப்படும் பயிற்சிகளை மேலும் சிறப்புடன் அளிக்க, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 1 கோடி ரூபாய் செலவினத்தில் கற்றவர்களை மையமாக கொண்ட பங்கேற்பு முறையிலான பயிற்சி முறை (Participatory Training Method) அறிமுகப் படுத்தப்படும்.

**20. நீர் மேலாண்மை மற்றும் அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு குறித்து அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு திறன் பயிற்சிகள் வழங்கிட, 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர் மேலாண்மை அறிவு சார் மையம் அமைக்கப்படும்.**

மாநில அரசின் நீர்வள ஆதார பாதுகாப்பு மற்றும் நீர் மேலாண்மை இயக்கம் மற்றும் மத்திய அரசு அறிமுகப்படுத்தியுள்ள அனைத்து வீடுகளுக்கும் குடிநீர் இணைப்பு திட்டங்களின் கீழ் செயல்படும் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளுக்கு தேவையான திறன் பயிற்சியினை வழங்கிட, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நீர் மேலாண்மை அறிவு சார் மையம் (Key Resource Centre) அமைக்கப்படும்.

**21. கிராமப்புற இளைஞர்களுக்கு தன்னார்வ சமூக சேவை குறித்த 3 மாத சான்றிதழ் படிப்பு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப் படுத்தப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** கிராமப்புற இளைஞர்களுக்கு தலைசிறந்த நிறுவனங்களுடன் இணைந்து தன்னார்வ சமூக சேவை குறித்த 3 மாத சான்றிதழ் படிப்பு மாநில ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி நிறுவனத்தில் 1 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அறிமுகப்படுத்தப்படும்.

**22. வட்டார மற்றும் ஊராட்சி அளவில் பல்லுயிர் பன்மம் மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.**

**மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, 2020–21** ஆம் நிதியாண்டில், தமிழ்நாட்டில் உள்ள வட்டார மற்றும் ஊராட்சி அளவில் பல்லுயிர் பன்மம் மேலாண்மைக் குழு உறுப்பினர்களுக்கு இயற்கையை பாதுகாக்கும் வகையில் மக்கள் பல்லுயிர் பன்மம் பதிவேட்டை (PBR) தயாரிக்க தேவையான திறன் மேம்பாட்டு பயிற்சிகள் **3** கோடி ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும்.

**23. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 8,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் 12 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், ஒவ்வொரு ஆண்டும் அமைக்கப்படும் புதிய சுய உதவிக் குழுக்களின் பொது நிதியை மேம்படுத்தவும், உள்கடன் வழங்குதலை அதிகப்படுத்தவும், அதிக அளவிலான வங்கிக்கடன் இணைப்பு பெறவும் ஆதார நிதி வழங்கப்படுகிறது. **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதி ஆண்டில், 8,000 புதிய சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வீதம் மொத்தம் 12 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

## 24. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 75 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் சுய உதவிக் குழுக்கள் பல்வேறு பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளவும், குழு உறுப்பினர்களின் வருமானத்தைப் பெருக்கிடவும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 2020–21 ஆம் நிதியாண்டில், 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 50,000 ரூபாய் வீதம் மொத்தம் 75 கோடி ரூபாய் சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்படும்.

## 25. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைப்பதற்கு 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

ஊரக மகளிர் மற்றும் குழந்தைகளிடையே ஊட்டச்சத்தினை உறுதி செய்யவும், இரத்த சோகை குறைபாட்டினை சரிசெய்யவும் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் வீட்டின் பின்புறத்தில் கீரை, முருங்கை, பப்பாளி, கறிவேப்பிலை, கொய்யா மற்றும் சப்போட்டா போன்ற சத்து மிகுந்த பலன் தரும் 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்கப் படவுள்ளது. இதற்காக **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், இரண்டு இலட்சம் மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்கள் பயன்பெறும் விதமாக 'ஊட்டச்சத்து தோட்டம்' அமைக்க 1 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 26. தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ், 6 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 100 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்

இயற்கைப் பண்ணையம் என்பது இயற்கை வழியில் கிடைக்கக்கூடிய உரங்கள் மற்றும் பயிர் பாதுகாப்பு முறைகளைக் கொண்டு சாகுபடி செய்வதாகும். இயற்கைப் பண்ணைய உணவுப் பொருட்களுக்கு மக்களிடம் வரவேற்பும், சந்தையில் அதிக விலையும் கிடைப்பதால் இயற்கைப் பண்ணையத்தை ஊக்குவிக்க, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தால் 6 கோடியே 23 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் 10,000 மகளிர் விவசாயிகளை உள்ளடக்கிய 100 இயற்கைப் பண்ணையத் தொகுப்புகள் உருவாக்கப்படும்.

**27. தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.**

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் நகர்ப்புற ஏழை மக்களைக் கொண்டு புதிய சுய உதவிக் குழுக்கள் அமைக்கப் படுகின்றன. அத்தகைய குழுக்களின் செயல்பாட்டை வலுப்படுத்தவும், வாழ்வாதார மேம்பாட்டு வாய்ப்புகளுக்கு வங்கிக்கடன் வழங்குவதை அதிகப்படுத்தவும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், 15,000 சுய உதவிக் குழுக்களுக்கு, குழு ஒன்றுக்கு 10,000 ரூபாய் வீதம் மொத்தம் 15 கோடி ரூபாய் ஆதார நிதியாக வழங்கப்படும்.

## 28. 15,000 நகர்ப்புற இளைஞர்களுக்கு 49 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்

தேசிய நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் வாயிலாக நகர்ப்புறத்தில் உள்ள வேலையில்லா இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை ஏற்படுத்தும் பொருட்டு, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், 15,000 இளைஞர்களுக்கு 49 கோடியே 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் வேலைவாய்ப்புடன் கூடிய திறன் மேம்பாட்டு பயிற்சி வழங்கப்படும்.

## 29. சமுதாயம் சார்ந்த அமைப்புகளுக்கு 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவாக ‘அம்மா விருதுகள்’ வழங்கப்படும்

ஊரக மற்றும் நகர்ப்புறங்களில் சிறப்பாக செயல்படும் மகளிர் சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பகுதி அளவிலான கூட்டமைப்புகளுக்கு **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் **மாண்புமிகு அம்மா அவர்களின் நினைவாக** மாநில அளவிலும், மாவட்ட அளவிலும் பரிசுத்தொகையுடன் கூடிய **‘அம்மா விருதுகள்’** வழங்கப்படும்.

## 30. மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்திட 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்

மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களின் திறமையை வளர்க்கவும், ஒற்றுமையை வெளிப்படுத்தவும், **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** 2020–21 ஆம் நிதியாண்டில், மாவட்ட, வட்ட மற்றும் நகர்ப்புற அளவில் கலாச்சார மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்க 2 கோடியே 60 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 31. சமுதாயம் சார்ந்த அமைப்புகளின் உறுப்பினர்கள், வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் பட்டறிவுப் பயணம் செல்வதற்கு 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்

மகளிர் சுய உதவிக் குழு, கிராம வறுமை ஒழிப்புச் சங்கம், ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மற்றும் நகர்ப்புறங்களிலுள்ள பகுதி அளவிலான கூட்டமைப்பைச் சார்ந்த உறுப்பினர்கள் தங்களுடைய செயல்பாட்டினை மேலும் மேம்படுத்துவதற்கு ஏதுவாக, **மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆசியுடன், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி,** வெளி மாவட்டங்கள் மற்றும் மாநிலங்களில் சிறப்பாக செயல்படும் குழுக்களைப் பார்வையிடவும், பட்டறிவுப் பயணம் மேற்கொள்ளவும், 2020–21 ஆம் நிதியாண்டில், 50 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**திரு. எஸ்.பி. வேலுமணி**
நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும்
சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்